# 18 சூழலைப் பாதுகாத்தல்



18.1

வானளாவும் மலைகளில் பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சிகள்
ஆழமான பள்ளத்தாக்குகள் அனைத்து வரும் கங்கைகள்
தாகம் தீர்த்து கரைசேரச் செய்யும் விந்தையிது பாரீர்!

ஆனந்தமாய் ஆடிப்பாடும் பறவையினம் விலங்கினங்கள்
ஆழ்கடலில் அற்புதமாய் நீந்தி வரும் மீனினங்கள்
பசிபோக்கி நலன்காக்கும் எம் சோதரர்கள் கேளீர்!

விதவிதமாய் சுவைதரு நல் காய்கனிகள் தானியங்கள்
அழகழகாய் அணிசெய்யும் நறுமலர்கள் மரஞ்செடிகள்
அத்தனையும் நம் நலன் பேணும் சோதரர்கள் பாரீர்!

இத்தனையும் இறைதந்தை எமக்கீய்ந்த கொடைகள் அன்றோ!
சித்தமதை உய்த்துணர்ந்து சேர்ந்திருந்து நாமொன்றாய்
பக்குவமாய் பேணியதைப் பயனடைவோம் வாரீர்!

செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த சியடைல் என்பவர் இவ்வாறு கூறுகிறார். 'நதிகள் நமது சகோதரர்களாகும்'. அவை நமது தாகத்தைத் தீர்க்கின்றன. நமது படகுகளை இடத்திற்கிடம் எடுத்துச் செல்கின்றன. நம்முடையவும், பிள்ளைகளுடையவும் பசியை போக்குகின்றன. நிலம் நம்மிலேயே ஓர் பகுதியாகும். நாம் நிலத்திலே ஓர் பகுதியினராவோம். நறுமணம் வீசும் மலர்கள் நமது சகோதரிகளாகும். காட்டிலே ஓடி, ஆடி விளையாடும் மான்கள், குதிரைகள், கழுகுகள் நமது சகோதரர்கள் ஆகும். மலை உச்சிகளில் புற்தரைகளில் காணப்படும் வளங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு குடும்பத்திற்குரியவையாகும்.

அந்த செவ்விந்திய இனத்தவர் புகழும் சூழல் இறைவன் நமக்கு தந்துள்ள உயர்ந்த கொடையாகும். ஏனெனில் இறைவனே படைப்பாளி நிலம், நீர், மலை, ஆகாயம், மிருகங்கள், பறவைகள், மரம், செடிகொடிகள், காய்கறி, பழவகைகள் புற்தரை ஆகிய அனைத்துப் படைப்புக்களும் மனிதனுக்காகவே படைப்புக்கள் அனைத்தும் நிறைவானவை, நல்லவை. மனிதன் படைப்பைப் பாதுகாக்க வேண்டும். அதைப் பற்றி திருவிவிவியம் எடுத்துக் கூறுகின்றது.

## படைப்பின் முதற்கதையின்படி சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்

வெறுமையாக இருந்த உலகம், நிறைவானதும் அழகுடையதுமாக மாறியது இறைவனுடைய படைப்புச் செயலின் பிரதிபலனாகும். அடுத்து, கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, 'பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்: அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள் வானத்துப் பறவைகள் நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்' என்றார் (தொநூ 1:28). மனிதனிடம் ஒப்படைக்கப்பட்ட படைப்பை அவன் பாதுகாத்துப் பயன் பெறுவதால் மட்டுமே அது அவனின் இல்லிடமாக இருக்கும். இவ்வுலகில் அபிவிருத்தி நிலவும் இடத்தில் இறைவனின் படைப்பின் மகிமையும் வெளிப்படும்.

மேலும் மனிதன் இறைவனுடைய 'உருவிலும் சாயலிலும்' பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளான் (தொ.நூ 1:26)

ஆரம்பத்தில் இறைவன் உலகைப் படைத்தார். இறைவனுடைய உருவிலும் சாயலிலும், படைக்கப்பட்ட மனிதன் இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகத்தை மீண்டும் மீண்டும் படைத்து பாதுகாத்து அதனை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இதனால் மட்டுமே இறைவனின் படைப்புச் செயலில் மனிதன் பங்கு கொள்ள முடியும்.

தாம் படைத்த படைப்பை மனிதன் 'ஆளவேண்டும் (தொ.நூ 1:26) என்பதே இறைவனின் விருப்பமாகும். இங்கு 'ஆளுதல்' என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் 'றதா' என்பதாகும். அதன் பொருள் 'பராமரிப்பு' என்பதாகும். (விலங்குகளைப் பராமரித்தல்) எனவே விலங்குகளைப் பராமரித்து, அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். அப்போது நமது வாழ்வு உறுதிப்படுத்தப்படும்.

**படைப்பைப் பற்றிய இரண்டாவது கதையின்படி சூழலைப்பாதுகாப்பதன் முக்கியத்துவம்.**

உலகைப் படைத்த இறைதந்தை, மனிதனைப் படைத்து படைப்புகள் அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் கொடுத்ததை தொடக்க நூலில் காணலாம்.

> ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.
>
> (தொ.நூல் 2:15)

படைப்பைப் பற்றி இரண்டாவது கதையில் இறைவன் மனிதனுக்கு பொறுப்புக்களைக் கொடுக்கின்றார்.

1. பயிரிடுதல் - பயிரிடுதல் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் ‘அபாத்‘ என்பதாகும். அதன் கருத்து உழைத்து உருவாக்குதல்.

உழைத்து உருவாக்குபவர் (மனிதன்) இறைபடைப்பைப் பராமரிக்கிறார்.

2. பாதுகாத்தல் - பாதுகாத்தல் என்பதற்குப் பயன்படுத்தும் எபிரேயச் சொல் ஷாமார் என்பதாகும். அதன் பொருள் பராமரித்தல். இதன் மூலம் மனிதன் படைப்பைப் பராமரிக்க வேண்டும் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

இச்செயல்கள் இரண்டையும் மனிதன் வெற்றிகரமாக நிறைவேற்றினால் அவனால் வாழக்கூடிய ஒரு சூழல் இவ்வுலகில் உருவாகும். இது அவனுடைய நன்மைக்கும் வழிவகுக்கும்.

ஆனால் படைப்பைப் பாதுகாக்காது விடின் பல தீயவிளைவுகளும் உருவாக முடியும். இன்றைய உலகிலே பல அழிவுகளுக்கு காரணமாயிருப்பது, இறை திட்டத்திற்கு எதிரான அரீத செயற்பாடே ஆகும். வெள்ளம், வரட்சி,மண்சரிவு என்பன அவற்றுள் சிலவாகும். ஆகையால் படைப்பைத் தவறான முறையில் பயன்படுத்தக் கூடாது.

சூழலைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பொறுப்பு உம்மிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதால் பின்வரும் செயல்களில் ஈடுபட முயற்சியுங்கள்.

- ✦ இயற்கையை அன்பு செய்து மதித்தல்
- ✦ நிலத்தின் வளத்தைப் பாதுகாத்தல்

✦ வாழும் சூழலை அழகுபடுத்தல்

✦ எதிர்காலப் பரம்பரைக்காக வளங்களைப் பாதுகாத்தல்

✦ சூழலை அழிப்பவர்களுக்கு அதானல் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறல்

✦ பௌதிக வளங்களை விருத்திசெய்து, சுயநலமின்றிப் பகிர்ந்து கொள்ளுதல்

✦ தம்மிடமுள்ள வளங்களைப் பகிர்ந்து கொள்ள அவர்களுக்கு ஊக்கமூட்டுதல்

**செயற்பாடு**

1. பின்வரும் எபிரேச் சொற்களின் கருத்தை எழுதுக.
   (அ) றதா (ஆ) அபாத் (இ) ஷாமார்

2. மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சொற்களுக்கும், சூழலை பராமரித்தலுக்கும் இடையிலுள்ள தொடர்பை தனித்தனியே சுருக்கமாக விளக்குக.

3. சூழலைப் பாதுகாத்தல், விருத்தி செய்தல் தொடர்பான கிறிஸ்தவ பொறுப்பை உயிரூட்டம் பெறச் செய்ய நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஐந்து தருக.

4. நாங்கள் சூழலின் ஒரு பிரிவினர் சூழல் நமது வாழ்வின் ஒரு பிரிவு என்ற தலைப்பின் கீழ் மனிதன் இறைவனின் துணைப்படைப்பாளியாக சமூக சூழலையும், பௌதீக சூழலையும் விருத்தி செய்யக்கூடிய வழிமுறைகளை 100 சொற்கள் அளவில் விளக்குக.

**வாழ்கைக்கு**
படைப்பிற்கும் சூழலுக்கும் மதிப்பளித்து இறைதந்தையை அன்பு செய்யுங்கள்.